தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 மே 11, வியாழக்கிழமை

சித்திரை 28, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.''

செய்யும் செயலை முடிப்பதற்கு வேண்டிய கருவிகளுடன் பொருத்தமான காலத்தையும் அறிந்து செய்தால் அரிய செயல் என்று எதுதான் இருக்கமுடியும்?

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

குலசேகரத்தில் விளையாட்டு அரங்கம்

234—(*வினா எண். 416) திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருக்கிற வாணியன் குளம் என்ற அந்தக் குளம் விவசாயத்திற்குப் பயன் அற்ற நிலையில் இருப்பதாலும், அதைச்சுற்றி நெல் வயல்கள் இல்லாமல் ரப்பர், தென்னை போன்ற மரங்கள் நட்டு வருவதாலும், எந்தவிதமான பயனும் இல்லாத நிலையில் இருப்பதாலும் அந்த நிலத்தை ஸ்போர்ட்ஸ் கவுன்சில் எடுத்து இப்படிப்பட்ட ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டும் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். எனவே இந்த ஆண்டிலாவது அந்தக் குளத்திலே இப்படிப்பட்ட ஒரு விளையாட்டு மைதானம் நிர்மாணிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்குளம் வட்டம், பொன்மலை கிராமத்தில் உள்ள அந்தக் குளத்தைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்ட விளையாட்டு மன்றத்திற்காக அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக மாவட்ட வருவாய் அலுவலர் மூலம் நில நிர்வாக சிறப்பு ஆணையருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கருத்துரு பெறப்பட்டதும், ஆணையர் அந்த நிலத்தைக் கையகப்படுத்துகிற அந்த நடவடிக்கை நிறைவேறியதும் அரசு அதைத் தொடர்ந்து அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசேகரம் பகுதியில் காவலர்களுக்கான பேரேடு மைதானம் கூட இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட ஒரு ஸ்டேடியத்தை ஸ்போர்ட்ஸ் கவுன்சில் மூலம் அமைத்தால் பொதுமக்களுக்கு விளையாட்டுக்களை மேம்படுத்துகிற அதே நேரத்தில் காவலர்களுக்கு பேரேடு நடத்துவதற்கும் பயன்படும் என்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பரிந்துரையைச் செய்திருப்பதால் உடனடியாக அந்த நிலத்தைக் கையகப்படுத்தி அந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய முக்கியத்துவம் உணரப்பட்டு இருக்கிறது. நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு அது இந்த இலாக்காவிற்கு ஒப்படைக்கப்பட்ட பின்னால்தான் செயல் முறையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விளையாட்டு மைதானங்களை உருவாக்குவதற்கு அரசு ஏதாவது விதிமுறைகளை வைத்திருக்கிறதா? குறிப்பாக இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கக்கூடிய பெரும் நகராட்சிகளில். இதுபோன்ற விளையாட்டு மைதானங்கள் இல்லாமல் இருக்கின்றன. குறிப்பாக திருப்பூர் நகரத்தில் இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட பெரும் நகரங்களில் விளையாட்டு மைதானங்களை உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய கொள்கைகள் எல்லாம் நல்ல கொள்கையாக இருந்தாலும் நிதி நிலையைப் பொறுத்துத்தான் ஒவ்வொன்றும் ஆலோசிக்கப்படுகிறது.

1989 மே 11]

திரு. உ. ரா. வரதராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் விளையாட்டு அரங்கங்கள் துவக்கப்படுவதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு அமல்படுத்தப் படாமல் பல உள்ளன. அதைப்பற்றி அரசு அறியுமா? அவற்றை அமல்படுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, வாய்ப்புள்ளபோது கவனிக்கப்படும்.

விழுப்புரம் கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பு.

235—(* வினா எண். 967) திரு. ஏ. ஜி. சம்பத்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பு துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இப்பொருள் குறித்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

திருப்பூர் நகரில் ரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்துதல்

236—(* வினா. எண். 961) திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் மையப் பகுதியிலுள்ள ரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் சுமார் 2, 3 லட்சம் மக்கள் வசிக்கக்கூடிய ஒரு பெரும் தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தினால் வாகனங்கள், போக்குவரத்துக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அந்தச் சூழ்நிலையில் நகரத்தின் மையத்திலே ரெயில்வே இருப்புப் பாதையை இணைக்கக்கூடிய ஒரே ஒரு பாலம் மிகக் குறுகிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால் பல மணி நேரம் போக்குவரத்துக்கள் பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்றது. எனவே அதனுடைய தேவையைக் கணக்கில் எடுத்து அரசு அந்த புதிய பாலத்தை உருவாக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.